(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 6.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, மே 18, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0002/'10

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்மாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவினுள் கிரிந்த - யால தொடக்கம் றண்மினிதென்ன கிராமம் வரை 7000 ஏக்கர் நிலப்பரப்பில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக, 4500 தொடக்கம் 6000 இடைப்பட்ட விவசாயக் குடும்பங்கள் சேனைப் பயிர்ச்செய்கை மூலம் தமது வாழ்வாதாரத்தைப் பேணிவருகின்றார்களென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நிர்க்கதியான அந்த சேனை விவசாயிகளின் விவசாய நிலங்களை அவர்களுக்கு இழக்கச் செய்கின்ற திட்டமொன்று உள்ளதா,

(ii) அவ்வாறாயின் அந்த முயற்சியை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விவசாய நிலங்கள் எப்போதும் காட்டு யானைகளினால் பாதிப்புக்குள்ளாக்கப் படுகின்றனவா,

(ii) அவ்வாறாயின் இந்தப் பாதிப்புகளைத் தவிர்த்துக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை,

(iii) மேற்படி நிலங்களுக்கான நீர், மின்சாரம், பாதைகள் ஆகிய அடிப்படை வசதிகளை வழங்கி விவசாயக் காணிகளாக அவற்றை அபிவிருத்தி செய்து, அவற்றின் உரிமையை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0008/'10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாண முதலமைச்சரின் முழுப் பெயர் யாதென்பதையும்,

(ii) அவர் அப் பதவியின் கடமைகளை பொறுப்பேற்றது எப்போதென்பதையும் ,

(iii) முதலமைச்சர் பதவியை ஏற்றதன் பின்னர் அவரை சந்திப்பதற்கு வெளி நாட்டு அரச பிரதிநிதிகள் வருகை தந்திருப்பின் அந்த எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவ்வாறு வருகை தந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) அவர்கள் வருகை தந்துள்ள திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவரது அழைப்பின் பேரில் வந் துள்ளார்களென்பதையும்,

(ii) மேற்படி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துரையாடிய விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0024 /'10

3.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

( அ) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் மொழிகளை கற்பிப்பதற்காக " கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற ஏனைய மாகாணங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளும் யாவையென்பதையும்,

(iii) அதற்காக கல்வி அமைச்சிலிருந்து அல்லது மாகாண கல்வி அமைச்சுகளிலிருந்து மேற்படி நிறுவனத்துக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அது எப்போது, எவரால், எத்தகைய நிபந்தனைகளின் கீழ் என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப் படுவதாயின் ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வள வென்பதையும் ,

(ii) கல்வி அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனமொன்று அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0026/'10

4.

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2011 ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, ஆங்கில மொழி மூலம் அரசியல் விஞ்ஞானம் மற்றும் விவசாய பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கான பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவை பாடசாலைகளில் கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்,

(iii) இன்றேல், ஆங்கில மொழி மூலம் அந்தப் பாடங்களைக் கற்றும் மாணவர்கள் எந்தப் பாடவிதானத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0003/'10

5\.

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்மாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில், சுரிவிருகம கிராமச் சேவகர் பிரிவுக்குட்பட்ட, கோங்கெடிஆர கிராமத்தில் வசிக்கும் மக்களின் பெரும்பாண்மையானோரின் சீவனோபாயம், வருடத்தில் ஒரு முறை மட்டும் செய்யக்கூடிய சேனைப்பயிர்ச் செய்கையாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கோங்கெடிஆர கிராமத்தில் அமைந்துள்ள இப்பயிர்ச் செய்கை நிலப்பரப்பினுள் 2009 செப்தெம்பர் மாதத்திலிருந்து சுற்றுப்புற வனங்களிலுள்ள காட்டு யானைகளைக் கொண்டு வந்து மின்வேலி அமைத்து, அடைத்து வைத்துள்ளதன் மூலம், நிர்க்கதியான சுமார் 300 குடும்பங்கள், சுமார் 3000 ஏக்கர் பரப்பளவிலான தமது சேனைப் பயிர்ச்செய்கை காணிகளை இழந்துள்ளனரா என்பதையும்,

(ii) ஆமெனில், பயிர்ச்செய்கை நிலங்களை இழந்து நிர்க்கதிக்குள்ளான சேனைப் பயிர்ச் செய்கையாளர்களின் பயிர்ச் செய்கைக் காணிகளை அவர்களிடம் திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0009/'10

6\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வன வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக எந்த வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து எவ்வளவு கடன் தொகை பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வரைபடத்திற்கு உள்ளடக்கப்படுவதற்காக இலக்கமிடப்பட்டுள்ள காடுகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(iii) வரைபடத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வள வென்பதையும்,

(iv) அதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஆலோசகரர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட வர்கள் யாவரென்பதையும்,

(iii) இந்த வெளிநாட்டு விஜயங்களுக்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காடுகளின் எல்லைகளை குறித்துக் காட்டுவதற்காகப் பெறப்பட்ட கொங்கிறீட் தூண்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவுசெய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) எஞ்சியுள்ள தூண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தேவையான எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகுதியாகும் தூண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) இந்தக் கருத்திட்டத்தின் வரைபடத்திற்குள்ளாக்கல் மற்றும் பயன்படுத்தப் பட்ட தூண்களின் பொருட்டு நில அளவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0025/'10

7.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் மொழிகளை கற்பிப்பதற்காக "கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்திற்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்,

(ii) அவ்வாசிரியர்கள் ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் போன்ற மொழிலகளை கற்பிப்பதற்கான தகுதியானவர்கள் என்பதற்கான சான்றிதழ் உள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டம் அரச நிறுவனமொன்றினால் மேற்பார்வை செய்யப்படு கின்றதா என்பதையும் ,

(vi) ஆமெனில், அது யாரால் என்பதையும் ,

(v) கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்று அல்லது பெறப்படாது இருக்கையில், சம்பந்தப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படா திருப்பின், மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0004/10

8.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,-

(ஆ) (i) 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நெற்காணிச் சட்டத்தினால் குத்தகை விவசாயியின் குத்தகை உரிமை, காணி உரிமை, பின்னுரிமயாளர் உரிமை மற்றும் ஏனைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டன என்பதையும்,

(ii) இவ்வுரிமைகள் அனைத்தும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் இரத்தாகியதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தமது உரிமைகளை இழந்த இலங்கையின் சுமார் 4 இலட்சம் குத்தகை விவசாயக் குடும்பங்களின் குத்தகை உரிமையினை பாதுகாக்கும் முகமாக புதிய நெற்காணிச் சட்டமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ii) ஆமெனில், அது எக்காலப்பகுதியில் நடைபெறும்

என்பதை அவர் இ ச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "லக்சதொச" நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பணிப்பாளரின் பெயர் என்ன என்பதையும்,

(ii) அவருடைய பெயர் திரு. பிறியால் பெரேராவா என்பதையும்,

(iii) அவ்வாறாயின் அந்தப் பிறியால் பெரேராவின் தகமைகள், வயது என்பன என்ன என்பதையும்,

(iv) வரவுப் புத்தகமொன்றில் கைச்சாத்திடாமல் 2 வருடங்களுக்கான (2006 - 2008) லீவை பணமாக்குதலாக 80,000 ரூபாவை அவர் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதையும்,

(v) சம்பளமாக 115,000 ரூபா

போக்குவரத்திற்காக 43,500 ரூபா

பெற்றோலுக்காக 20,000 ரூபா

தொலைபேசிக்காக 2,500 ரூபா

முதலிய மாதாந்த ஊதியங்களை அவர் பெற்றுக்கொண்ட காலப்பகுதியையும் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இவ்வாறான நன்மைகளைப் பெறும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பெயர்கள் என்ன ?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிய 1621/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1627/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1632/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,—உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிகளைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.